

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம், 09.01.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணி அளவில் எடப்பாடி பி.வி.டி.பங்க் அருகில் உள்ள ஸ்ரீ வெங்கடேஷ்வரா மஹாலில் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ப.தங்கமுத்து தலைமையில், முன்னாள் அமைச்சரும், சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், சேலம் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.செல்வகணபதி,எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடப்பாடி தொகுதி பார்வையாளர் நா.முருகவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சம்பத்குமார், சுந்தரம், எலிசபெத்ராணி, பொருளாளர் பொன்னுசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முருகேசன், பூவாகவுண்டர், ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் அன்பழகன், காசிவிஸ்வநாதன், சௌந்தரராஜன், ரவிக்குமார், பழனியப்பன், தங்கமணி, நகரக் கழக செயலாளர்கள் பாஷா, காசிவிஸ்வநாதன், குப்பு (எ) குணசேகரன், செல்வம், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவம், பாலகிருஷ்ணன், நல்லதம்பி, பச்சமுத்து, சீனிவாசபெருமாள், ராஜேஷ், மிதுன்சக்ரவர்த்தி, அர்த்தநாரீஸ்வரன், பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆரிய படைவீடு ஊராட்சியில் உள்ள சமத்துவபுரத்தில் அனைத்து சமூகத்தினரும் கலந்து கொண்ட சமத்துவப் பொங்கல் விழா மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்ட அவைத்தலைவர் என்.நசீர் முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், தியாக.சுரேஷ், உள்ளூர் டி.கணேசன், கோ.க.அண்ணாதுரை, பி.எஸ்.குமார், எஸ்.கே.முத்துசெல்வம், என்.நாசர், ஜெ.சுதாகர், மிசா.என்.மனோகரன், இர.உதயசந்திரன் உள்ளிட்ட பகுதி, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### ஆளுநருக்கு அதிகாரம் என்ற பெயரில்

# தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை சீர்குலைக்க பா.ஜ.க. முயற்சி!

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் கண்டனம்!

சென்னை, ஜன. 12-



ஆளுநருக்கு அதிகாரம் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை கண்டு அஞ்சி சீர்குலைக்க நினைக்கும் ஒன்றிய அரசை கண்டிக்கிறது எனவும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன் எனவும் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பதின் மறு பெயர் தி.மு.க. ஒரு காலத்தில் வடக்கு வளர்கிறது தெற்கு தேய்கிறது என்ற அளவில் தென் மாநிலங்கள் இருந்தது. நிலைமை தலைக்கீழாக மாறி தெற்கு வளர்கிறது வடக்கு தேய்கிறது இன்றைய நிலை. அதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் அதாவது 1989 ஆம் ஆண்டு ஆட்சி ஏற்ற பிறகு தமிழ் நாட்டின் வளரச்சி என்பது பல மடங்கு ஏற்றத்தை கண்டது. எப்போதெல்லாம் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறதோ அப்போ தெல்லாம் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதில் மற்ற மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி முன்னேற்றம் அடைய பாடுபடும் உதாரணத்திற்கு திருவள்ளுவர் பெயரில் பல்கலைக்கழகம், பாரதி தாசன் பெயரில் பல்கலைக்கழகம், காமராசர் பெயரில் பல்கலைக்கழகம் தந்தை பெரியார் பெயரில் பல்கலைக்கழகம், என அமைத்து பல்வேறு அரசு கலை அறிவியல் கல்லூரிகள் நிறுவியவர் தான முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐஐடிக்கு நிகராக அண்ணா பல்கலைக் கழகம் அமைத்து கீழ் பொறியியல் கல்லூரிகள், பல்பகலைக் கழகங்களை உருவாக்கி ஏழை எளிய நடுத்தர மக்களின் பிள்ளைகள் மேற்படிப்பு பயின்று இந்திய அளவிலும் உலக அளவிலும் பெரிய அறிஞர்களாகவும், அறிவியல் விஞ்சானிகளாகவும் மேம்பாடு அடையவித்திட்டவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் இல்லை என்றால் தமிழ்நாடு நிலைமை கேள்விக் குறியாக்கப்பட்டு இருக்கும், தி.மு.க. ஒன்றிய அரசில் இடம்பெறும் போதெல்லாம் தமிழ்நாட்டின் முன்னேற்றம் அடையும் விதமாக துறைகளை பெற்று வளர்ச்சிக்கு வித்திட்டவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அதாவது கலைஞர் அவர்களின் மூளையாகச் செயல்பட்ட முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்கள் தமிழ் நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் சென்றார் என்றால் அது மிகையாகாது அந்த விதத்தில் எண்ணற்ற தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து இந்தியாவை திரும்பிப் பார்க்க வைத்தார். உதாரணத்திற்கு திருபெரும்புதூர் ஹூண்டாய் நிறுவனம், சென் கோபியன் கண்ணாடி தொழிற்சாலை, சாம்சங், நோக்கியா மொபைல் தொழிற்சாலைகள், என அடிக்கிக் கொண்டே போகலாம். தி.மு.க. ஆட்சியில் தான் கிண்டி உள்ளிட்ட பல நகரங்களில் டைடல் பூங்காக்களைத் தொடங்கி வெளி நாட்டிற்கு நிகராக லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத் தந்தார். அதோடு அல்லாமல் ஒன்றிய அரசில் இடம் பெற்றும் டி.ஆர்.பாலு அவர்களை ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக்கி கத்திப்பாரா மேம்பாலம், பாடி வெளிவட்ட மேம்பாலம் என சென்னை மற்றும் தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள அனைத்து மேம்பாலங்களும் தி.மு.க. ஆட்சியிலும் மற்றும் ஒன்றியத்தில் ஆட்சியில் பங்குவகித்த போது தான் என்பதை அனைவரும் அறிவார்கள். அதேபோன்று ஒன்றிய அரசில் தகவல் தொழிற்நுட்பத் துறை பெற்று தயாநிதி மாறன் அவர்களை அமைச்சராக்கி தகவல் தொழில் நுட்ப மையங்களை ஏற்படுத்தி பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை பெற காரணமாக இருந்தார். அதேபோன்று ஆ.ராசா அவர்ரகளையும் ஒன்றிய அமைச்சரவையில் தகவல் தொழில்நுட்பத் துறை யை பெற்றுக் கொடுத்து தொலைத் தொடர்புத்துறையில் இன்று புரட்சி ஏற்பட்டியிருக்கிறது என்றால் இவரே காரணம் இப்படி அடிக்கிக் கொண்டே போகலாம்.

இத்தனைக்கும் காரணம் யார் இமாலய வளர்ச்சி தமிழ்நாடு பெற்றிருப்பது எதனால் என்பதை பொருத்துக் கொள்ளமுடியாத சகித்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் தி.மு.க. அரசு தானே, இவர்களில் திராவிட மாடல் ஆட்சி தானே, தமிழ் நாட்டின் வளர்ச்சியை ஒடுக்க வேண்டும் என்றால் கல்வியில் கை வைக்கவேண்டும் என்று எண்ணி புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கிறது. அப்படி இல்லை என்றால் நிதியை தரமறுக்கிறது. இதனால் 2500 கோடி ரூபாயை இன்னும் விடிவிக்காமல் வஞ்சிக்கிறது. கல்வியை மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி வருகிறார் ஆனால் செவிக்கொடுக்க மறுத்து வருகிறது ஒன்றிய அரசு. எப்படி ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே ரேசன் கடை, என்று கங்கணம் கட்டி செயல் படுத்த நினைக்கின்றார்களோ அதே போன்று தான் நாடு முழுவதும் ஒரே மொழி என்று கொண்டுவர துடித்து தான் பல்கலைக்கழக துணை வேந்தர் நியமனத்தில் மாற்றத்தை கொண்டுவந்து ஆளுநருக்கு முழு அதிகாரத்தை கொடுத்துள்ளது யு.ஜி.சி அமைப்பு. அதாவது மாநில அரசிற்கு துணை வேந்தர்களை அமைக்கும் அதிகாரம் இல்லை. உத்தரவு ஆளுநரே நியமித்துக் கொள்ளும் என்ற விதியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற உத்தரவு யாரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளமுடியும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்கு அதிகாரம் இல்லையாம் ஒன்றிய அரசால் நியமித்த ஆளுநருக்கு முழு அதிகாரம் இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கும் அரசியல் அமைப்பு மாண்பிற்கும் எதிரானது. இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

சட்டப்பேரவையில் ஆளுநருக்கு துணை வேந்தர் நியமனத்தில் முழு அதிகாரம் உத்தரவு ரத்து செய்ய தனித் தீர்மானம் கொண்டுவந்த இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

மேலும் துணை வேந்தர் நியமணம் ஆளுநருக்கு முழு அதிகாரம் வழங்கி உத்தரவிட்ட ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கின்றேன்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் ஒன்றிய பூத் கமிட்டி உறுப்பினர்கள் கள ஆய்வு கூட்டம் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் வேப்பூர் மற்றும் கண்டப்பங்குறிச்சியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் சுபா. சந்திரசேகர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், ஒன்றிய கழகத் தேர்தல் மேற்பார்வையாளர் சுபாஷ், அவைத் தலைவர் பால் கருப்பையா நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணை செயலாளர்கள் பூலாம்பாடி த. அண்ணாதுரை, மாரிமுத்தாள், குணசேகரன், அன்புகுமரன், பொருளாளர் ஜி. வெங்கடாசலம், மாவட்ட பிரதிநிதி சக்திவிநாயகம் நெசவாளர் அணி தலைவர் சுப்பு. அன்பழகன் ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ராஜா, தொண்டரணி துணை அமைப்பாளர் ரகுநாதன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன், துணை அமைப்பாளர்கள் வேப்பூர் வ. குணசேகரன், பாபு, ராஜா, சூர்யா, சாக்ரடீஸ் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.க.வின் வெற்றிக்குப் பாடுபடுவோம்!

## இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவிப்பு!

சென்னை, ஜன. 12-



ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரின் வெற்றிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடும் என்று இக்கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர், ஈ.வெ.கி.ச.இளங்கோவன் மறைவு காரணமாக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் ஆதரவுடன் இடைத் தேர்தலில் போட்டியிடும்தி.மு.கழகம் வேட்பாளராக வி.சி. சந்திரகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிப்ரவரி 5 ஆம் தேதி நடைபெறும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரின் வி.சி.சந்திரகுமார் மாபெரும் வெற்றிக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பாடுபடும் என்பதை மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### குவைத் தி.மு.க. அயலக அணி சார்பாக

# மிக இளம் வயது உலக சதுரங்க சாம்பியன் சர்வாணிகாவுக்கு ‘இளம் சாதனையாளர்’ விருது!

## சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் வழங்கப்பட்டது!

குவைத், ஜன. 12-

குவைத் நாட்டில் உலக சதுரங்க சாம்பியன் சர்வாணிகாவுக்கு தி.மு.க., அயலக அணி சார்பில் “இளம் சாதனையாளர்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

குவைத் நாட்டில் நடைபெறுகின்ற மாபெரும் FIDE RATED OPEN CHESS TOURNAMENTகளில் ஆசியாவின் மிக இளம் வயது WOMEN CANDIDATE MASTER, உலக சதுரங்க சாம்பியன் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் ஆசியாவின் மிக இளம் வயது WCM சர்வாணிகா (வயது9) இந்தியா சார்பில் வயது வரம்பற்றோர் பிரிவில் கலந்து கொண்டு விளையாட குவைத் நாட்டிற்கு வந்துள்ளார்.

இதற்கு முன்னதாக பிரான்ஸ் நாட்டில் புதிய சாதனை படைத்து சதுரங்க வரலாற்றில் புதிய மைல் கல்லை எட்டினார் சர்வாணிகா. பிரான்ஸ் நாட்டில் Annemasseயில் நடைபெற்ற மாபெரும் FIDE RATED OPEN சதுரங்க போட்டிகளில், இந்தியா சார்பில் விளையாடி 43 (POINTS) புள்ளிகளைப் பெற்று மிக இளம் வயதில் 2049 (Elo Points) புள்ளிகளை சேர்த்து சர்வாணிகா புதிய சாதனை படைத்துள்ளார்.

மேலும் இந்தியாவில் GM வைஷாலி 12 வயதிலும், IM&WGM வன்டிகாஅகர்வால் 12 வயதிலும், IM&WGM திவ்யா தேஷ்முக் 11 வயதிலும் 2000 புள்ளிகளை கடந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுமி சர்வாணிகாவை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணைக்கிணங்க, கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி. எம்.பி. செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா. எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின் படி நமது கழக அயலக அணி சார்பில் நேரில் சந்தித்து இளம் வயதில் பல சாதனைகள் புரிந்து வரும் சர்வாணிகா வுக்கு திமுக அயலக அணி குவைத் சார்பாக திமுக அயலக அணியின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் “ இளம் சாதனையாளர் “ எனும் விருது வழங்கிய சிறப்பிக்கப்பட்டது.

அப்போது பேசிய சிறுமி சர்வாணிகா தன்னை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டியதை நினைவுகூர்ந்து பெருமிதம் கொண்டார். மேலும் தனது வெற்றிக்கு மிகவும் உறுதுணையாய் இருப்பது தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “திராவிட மாடல் அரசு” என்றும், தான் ஒவ்வொரு முறை வெற்றி பெற்று செல்லும்போதும் தமிழகத்தின் துணை முதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் அவர்கள் தன்னை பாராட்டி தனக்கு எப்பொழுதும் உறுதுணையாய் இருக்கின்றார் என்று மகிழ்வுடன் கூறினார்.

மேலும் தான் வெற்றி பெறும் போதெல்லாம் தமிழ்நாடு அரசு தனக்கு செய்யும் உதவிகளையும் நினைவு கூர்ந்தார். சதுரங்க போட்டி மட்டுமல்லாது படிப்பிலும் தான் சுட்டி ஒவ்வொரு தேர்விலும் முதல் மதிப்பெண் எடுத்து வருகிறேன் என பெருமையுடன் கூறினார். அது சமயம் அவரது தாயார் திருமதி அன்பு ரோஜா சரவணன் அவர்களும் உடன் இருந்தார்.

இந்நிகழ்வில் திமுக அயலக அணி குவைத் மண்டலத்தின் அவைத்தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, கிழக்கு மண்டல அமைப்பாளர் குடந்தை சி.தியாகராஜன், தொழிலாளர் நல அணி செயலாளர் திருவிடத்தினூர் ஏ. எஸ்.முகமது ரபிக், இளைஞரணி துணைச் செயலாளர் உளுந்தூர்பேட்டை சு. வெங்கடேசன், பொறியாளர் அணி செயலாளர் மருதூர் பிரேம்குமார், மகளிர் அணி து.செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்பிரமணியன், திருச்சி சௌமியா சுரேஷ்குமார். உடையார் பாளையம் செந்தில்குமார், கூத்தாநல்லூர் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர்.



வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி சீரிய ஏற்பாட்டில் விழுப்புரம் தெற்கு மாவட்டம், கோலியனூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனை பிரச்சாரக் கூட்டம் சுந்தரிப்பாளையம் கிராமத்தில் ஒன்றிய செயலாளர் ப. தெய்வசிகாமணி தலைமையில் கழக பேச்சாளர் செந்தூர் பாலகிருஷ்ணன் மற்றும் இளம் பேச்சாளர் வெற்றிசெல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். ஒன்றிய குழு தலைவர் சச்சிதானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாவட்ட கவுன்சிலர் தமிழ்செல்வி கேசவன், ஒன்றிய குழு துணை தலைவர் உதயகுமார், அவைத்தலைவர் கண்ணப்பன், ஒன்றிய நிர்வாகிகள் சிவசங்கர், குணசேகர், ஸ்ரீதர், ராமச்சந்திரன், ஜெயந்தி, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியை ஏ ஊராட்சி மன்ற தலைவர் சிவகாமி ராஜசேகர் சிறப்பாக ஏற்பாடு செய்தார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா. இராஜசேகர் நன்றியுரையாற்றினார்.